*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
www.ngmtamil.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://tamilmanam.in/
Issue DOI: https://doi.org/10.63300/tm09012026

# The Concept of Consonant Clusters in Tolkappiyam

**Dr.T. Kannan***

Professor and Head, Department of Rare Manuscripts, Tamil University, Thanjavur.
*Correspondence : kannanyoga.kannan@gmail.com, Tel: +919786686357

**To Cite this Article**
Dr. T. Kannan, "The Concept of Consonant Clusters in Tolkappiyam", *Tamilmanam International Journal of Tamil Studies*, Vol. 7, Issue 02, February 2026, pp.-509-523.

**Article Info**
Received on 01-Feb-2026, Revised on 10-Feb-2026, Accepted on 11-Feb-2026, Published on 18-Feb-2026

## ABSTRACT

*This article provides a detailed analysis of how the theory of 'Meimmayakkam' (Consonant Clusters/Blending) is handled in the Eluttatikaram (Book of Orthography) of Tolkappiyam. Generally, students perceive Meimmayakkam merely as a section within Nunmarapu; however, Tolkappiyam discusses this concept across several chapters of Eluttatikaram.*

*The article explains that Meimmayakkam is defined in two states: Udanilai (Immediate/Self-clustering), where a consonant blends with itself, and Vetrunilai (External/Cross-clustering), where a consonant blends with other consonants. It further discusses the nine types of letter blending mentioned by the commentator Ilampuranar, arguing that only the blending of a consonant with another consonant falls under a strictly defined grammatical framework. Additionally, the paper clarifies the nature of triple consonant clusters (occurring after ya, ra, and zha) and demonstrates how the rules of Meimmayakkam serve as the foundation when words like 'Pon' undergo transformations during Punarchi (Internal/External Sandhi).*

***KEYWORDS:*** *Tolkappiyam, Meimmayakkam (Consonant Clusters), Nunmarapu, Ilampuranar, Eirotru (Triple Consonants), Vetrunilai Meimmayakkam, Udanilai Meimmayakkam, Punarchi (Sandhi/Morphophonemics), Vazhuvamaithi (Grammatical Acceptability).*


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
**www.ngmtamil.in** *DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

# தொல்காப்பியத்தில் மெய்ம்மயக்கக் கருத்தியல்

***முனைவர் த.கண்ணன்,**

பேராசிரியர், தலைவர், அரிய கையெழுத்துச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் ‘மெய்ம்மயக்கம்’ என்னும் கோட்பாடு எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது. பொதுவாக மாணவர்கள் மெய்ம்மயக்கத்தை நூன்மரபில் வரும் ஒரு பகுதியாக மட்டுமே கருதுகின்றனர்; ஆனால், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தின் பல இயல்களில் இக்கருத்தியலை எடுத்துரைக்கிறது. மெய்கள் தம்முடன் தாம் மயங்குதல் (உடனிலை) மற்றும் தம்முடன் பிற மெய்கள் மயங்குதல் (வேற்றுநிலை) ஆகிய இரு நிலைகளில் மெய்ம்மயக்கம் வரையறுக்கப்படுவதை இக்கட்டுரை விளக்குகிறது. இளம்பூரணர் குறிப்பிடும் ஒன்பது வகை எழுத்து மயக்கங்கள் குறித்தும், அதில் மெய்யுடன் மெய் மயங்குவதே வரையறைக்கு உட்பட்டது என்பதும் விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஈரொற்றுத் தொடர்கள் (ய, ர, ழ-வை அடுத்து வருவன) குறித்தும், 'பொன்' போன்ற சொற்கள் புணர்ச்சியில் திரியும் போது மெய்ம்மயக்க விதிகள் எவ்வாறு அடிப்படையாக அமைகின்றன என்பதையும் இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

**குறிப்புச் சொற்கள் (Keywords)**

தொல்காப்பியம், மெய்ம்மயக்கம், நூன்மரபு, இளம்பூரணர், ஈரொற்று, வேற்றுநிலை மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம்மயக்கம், புணர்ச்சி, வழுவமைதி.

இன்றைய மாணவர்கள் தொல்காப்பியம் நூன்மரபில் குறிக்கப்படும் மெய்ம்மயக்கத்தை மட்டும் மெய்ம்மயக்கக் கருதியலாகப் படிக்கின்றனர். ஆனால், தொல்காப்பியம் மெய்ம்மயக்கம் என்ற கருத்தியலை எழுத்திகாரத்தின் பல இடங்களில் எடுத்துரைக்கிறது. எனவே, மெய்ம்மயக்கம் குறித்த கருத்தியல் கீழ்வருமாறு தொகுத்தளிக்கப்படுகிறது.

எழுத்திலக்கணத்தை ஒன்பது இயல்களில் கூறும் தொல்காப்பியம் அவற்றுள் புணர்ச்சி குறித்த இலக்கணத்தை, புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என ஆறு இயல்களில் எடுத்துரைக்கிறது. சொற்கள் புணர்வதன் அடிப்படையில் வெளிப்படும் எழுத்தின் இயல்புகளை எடுத்துரைக்கும் தொல்காப்பியம் புணர்ச்சி குறித்த இலக்கணத்தை விரிவாக எடுத்துரைக்கிறது.

மெய்ம்மயக்கம் என்ற எழுத்திலக்கணக் கூறு சொற்களில் மெய்யெழுத்துகள் தம்முடன் தாமும் தம்முடன் பிறவுமாகத் தொடரும் இயல்பைச் சொல்லும் இலக்கணக் கூறாக அமைகிறது.



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

இந்நிலையில் மெய்கள் தனிமொழிகளாகத் தொடர்வதும் புணர்ச்சிகளின் அடிப்படையில் சொற்களுக்குத் தொடர்வதுமாக அமைகிறது.

ஒரு மெய்யுடன் பிற மெய்கள் தொடர்வதும் ஒருமெய் தன்னுடன் தானே தொடர்வதும் என மெய்ம்மயக்க வரையறுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மெய்கள் தொடரும் அமைப்பான இரண்டுநிலைகளில் எடுத்துரைக்கப்படுகிறது.

வல்லினம், மெல்லினம், இடையினம் என மெய் எழுத்துகள் வகைமை செய்யப்பட்ட போதும் அவை தம்முள் மேற்கண்டவாறு இரண்டுநிலைகளில் தொடரும் இயல்பினவாக உள்ளன. இதனைத் தொல்காப்பியம்

வல்லெழுத் தென்ப கசட தபற (எழுத்.19)
மெல்லெழுத் தென்ப ஙஞண நமன (எழுத்.20)
இடையெழுத் தென்ப யரல வழய (எழுத்.21)
அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை (எழுத்.21)

என்றுரைக்கிறது.

**தம்முடன் பிற மெய்கள் தொடர்தல்**

ஒரு மெய்யுடன் பிற மெய்கள் தொடர்ந்து வருவதற்கான வரையறையைத் தொல்காப்பியம் குறிக்கப்படுகிறது.

- ட், ற், ல், ள். எனும் மெய்களைத் தொடர்ந்து க், ச், ப் எனும் மூன்று மெய்கள் தொடர்ந்து வரும் (நூன்.23).
- ல், ள் எனும் மெய்களை அடுத்து ய், வ், எனும் மெய்கள் தொடர்ந்து வரும் (நூன்.24).
- ங், ஞ், ண், ந், ம், ன் எனும் மெல்லின மெய்களைத் தொடர்ந்து அவற்று வல்லின மெய்களான க், ச், ட், த், ப், ற் எனும் மெய்கள் தொடரும் (நூன்.25).
- ண், ன், எனும் மெய்களைத் தொடர்ந்து க், ச், ஞ், ப், ம், ய், வ் எனும் மெய்கள் தொடரும் (நூன்.26).
- ஞ், ந், ம், வ் எனும் மெய்களைத் தொடர்ந்து ய் எனும் மெய் தொடரும் (நூன்.27).
- ம் எனும் மெய்யைத் தொடர்ந்து வ் எனும் மெய் வரும் (நூன்.28).
- ய், ர், ழ் எனும் மூன்று மெய்களைத் தொடர்ந்து மொழி முதலாகும் மெய்களும் ங் எனும் மெய்யும் வரும் (நூன்.29).

மெய்கள் தொடரும் இம்முறையைக் கீழ்வரும் அட்டவணை வழியாக விளக்கலாம்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm09012026.27

| தம்முடன் பிற தொடர்தல் | | நூற்பா | சான்றுகள் |
|---|---|---|---|
| ட் | க், ச். ப். | எழுத்.23 | கட்க, கட்சிறார், கட்ப |
| ற். | க், ச். ப். | எழுத்.23 | கற்க, கற்சிறார், கற்ப |
| ல் | க், ச். ப். | எழுத்.23 | செல்க, செல்சிறார், செல்ப |
| | ய், வ் | எழுத்.24 | கொல்யானை, கோல்வளை |
| ள் | க், ச். ப். | எழுத்.23 | கொள்க, கொள்சிறார், கொள்ப |
| | ய், வ் | எழுத்.24 | வெள்யானை, வெள்வளை |
| ங் | க் | எழுத் 25 | தெங்கு |
| ஞ் | ச் | எழுத் 25 | மஞ்சு |
| | ய் | எழுத்.27 | உரிஞ்யாது |
| ண் | ட் | எழுத்.25 | வண்டு |
| | க், ச், ஞ், ப், ம், ய், வ் | எழுத்.26 | வெண்கலம், வெண்சாந்து, வெண்ஞாண், வெண்பலி, வெண்மாலை, மண்யாது, மண்வலிது |
| ந் | த் | எழுத் 25 | பந்து |
| | ய் | எழுத்.27 | பொருந்யாது |
| ம் | ப் | எழுத் 25 | கம்பு |
| | ய் | எழுத்.27 | திரும்யாது |
| | வ் | எழுத்.28 | நிலம்வலிது |
| ன் | ற் | எழுத் 25 | கன்று |
| | க், ச், ஞ், ப், ம், ய், வ் | எழுத்.26 | புன்கண், புன்செய், பொன்ஞான், பொன்பெரிது, பொன்மாலை, பொன்யாது, பொன்வலிது. |
| வ் | ய் | எழுத்.27 | தெவ்யாது |
| ய் | க்,ச்,த்,ப்,ஞ்,ந்,ம்ய்,வ் (முதலாகு எழுத்துகள் 9) ங் | எழுத்.29 | வேய்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, வேய்ஙனம் **(வேய்யாது - உடனிலை)** |
| ர் | க்,ச்,த்,ப்,ஞ்,ந்,ம்,ய்,வ் (முதலாகு எழுத்துகள் 9) ங் | எழுத்.29 | வேர்கடிது, சிறிது, தீது,பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, வேர்ஙனம் |


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

| | | | |
|---|---|---|---|
| ழ் | க்,ச்,த்,ப்,ஞ்,ந்,ம்,ய்,வ் (முதலாகு எழுத்துகள் 9) ங் | எழுத்.29 | வீழ்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, வீழ்ஙனம் |

**மேற்கண்ட அட்டவணையில் க ச த ப என்ற நான்கு மெய்கள் பிற மெய்களுடன் மயங்குவதாகக் கூறப்படவில்லை. அதாவது க ச த ப என்ற நான்கு மெய்கள் தம்முடன் தாம் மயங்குமே அன்றிப் பிற மெய்களுடன் மயங்கிவாரா என்பது இதனால் உணரப்படுகிறது.**

**தம்முடன் தாம் தொடரும் மெய்கள்**

ஒருமெய்யைத் தொடர்ந்து அதே மெய் வரும் வரன்முறைகளைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. பதினெட்டு மெய்களுள் ர், ழ் எனும் இரண்டு மெய்கள் மட்டும் தம்மைத் தொடர்ந்து தாம் வருதல் இல்லை. இவை நீங்கிய பதினாறு மெய்களும் தம்மைத் தொடர்ந்து தாம் வரும் இயல்பினவாகும் என்பதைத் தொல்காப்பியம்,

மெய்ந்நிலைச் சுட்டின் எல்லா வெழுத்தும்
தம்முன் தாம்வரூஉம் ரழ அலங்கடையே (நூன்.30).

என்றுரைக்கிறது. இவ்வாறு தம்முடன் தாம் மயங்குவதற்கான சான்றுகளைக் கீழ்வருமாறு அட்டவணை செய்யலாம்.

| தம்முடன் தாம் தொடர்தல் | | சான்றுகள் |
|---|---|---|
| க் | க் | காக்கை |
| ச் | ச் | பச்சை |
| ட் | ட் | பட்டை |
| த் | த் | தத்தை |
| ப் | ப் | அப்பை |
| ற் | ற் | கொற்றி |
| ங் | ங் | எங்ஙனம் |
| ஞ் | ஞ் | மஞ்ஞை |
| ண் | ண் | மண்ணை |
| ந் | ந் | வெந்நோய் |
| ம் | ம் | அம்மி |
| ன் | ன் | கன்னி |
| ய் | ய் | வெய்யர் |


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

| ர் தம்மைத் தொடர்ந்து தாம் வராது | | |
|---|---|---|
| ல் | ல் | எல்லி |
| வ் | வ் | எவ்வி |
| **ழ் தம்மைத்தொடர்ந்து தாம் வராது** | | |
| ள் | ள் | கொள்ளி |

**மேற்கண்ட அட்டவணையில் ர ழ என்பன தம்முடன் தாம் வருதல் இல்லை என்பதால் மெய்ம்மயக்கத்தைக் கீழ்வருமாறு இறுதி செய்யலாம்.**

- **தம்முடன் தாம் மட்டும் மயங்கும் மெய்கள் – க ச த ப என்னும் நான்கு மெய்கள்**
- **தம்முடன் பிற மட்டும் மயங்கும் மெய்கள் – ர ழ என்னும் இரண்டு மெய்கள்**
- **தம்முடன் தாமும் பிறவும் மங்கும் மெய்கள் – ட, ற, ங, ஞ, ண, ந, ம, ன, ய, ல, வ, ள என்னும் பன்னிரண்டு மெய்கள்.**

**மெய்ம்மயக்க வழுவதைி**

மெய்ம்மயக்கம் நூன்மரபில் சொல்லப்படுகிறது. அவ்வாறு சொல்லப்பட்டனவற்றுள் வழுவாக வருவன உண்டு. அதாவது “ட ற ல ள என்னும் புள்ளி” (எழுத்.23) என்ற நூற்பாவில் மெய்கள் மெய்ம்மயக்கத்துள் கூறிய முறையில் அன்றி மயங்கி வருகின்றன. அதாவது, ட, ற, ல என்பனவற்றுடன் க ச ப என்ற பிற மெய்களே மயங்கிவரும் என்றிருக்க இந்நூற்பாவில் டகரத்துடன் றகர மெய்யும் றகரத்துடன் லகர மெய்யும் மயங்கியன. அவ்வாறே, லகரத்துடன் க ச ப ய வ என்ற மெய்கள் மயங்கும் என்றிருக்க இந்நூற்பாவில் லகரத்துடன் ளகரம் மயங்கி வருகின்றது. இவ்வாறு மயங்குதல் வழுவாகும். எனினும் இவை தன்னைக் குறிக்கும் நிலையாக வருவதால் வழுவமைதியாகின்றன. இதனைத் தொல்காப்பியம் மொழிமரபில்,

“தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்க மானமில்லை” (எழுத்.47) என்றுரைக்கிறது.

இது நூன்மரபில் சொல்லப்பட்ட மெய்ம்மயக்கத்தின் வழுவமைதியாகும் என்பர் இளம்பூரணர். “ ட ற ல ள என்னும் புள்ளி” (எழுத்.23) எனும் நூற்பாக்களைப் போல அமையும் நூற்பாக்களில் தன்னைக் குறிக்கும் மெய்யெழுத்துகள் இன்று உயிர்மெய் போல் புள்ளியின்றி எழுதப்படுகின்றன. மெய்ம்மயக்க வழுவமைதிக்கு இந்நூற்பா காட்டப்படுவதால், உரையாசிரியர் காலத்தில் இவ்வாறான நூற்பாக்களில் தன்னைக் குறிக்கும் மெய்யெழுத்துகள் புள்ளி வைத்த மெய்யெழுத்துகளாக எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அறிந்துகொள்ளமுடிகிறது.

**ஈரொற்றுகள் தொடர்தல்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)
tamilmanam

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

நூன்மரபில் மெய்கள் தொடர்வதை தம்முடன் பிற, தம்முடன் தாம் எனும் இருநிலைகளில் விளக்கிய தொல்காப்பியம், மெய்கள் ஈரொற்றுகளாக வருவதை மொழிமரபில் குறிப்பிடுகிறது. ய, ர, ழ என்ற மூன்று மெய்களைத் தொடர்ந்து க, ச, த, ப, ங, ஞ, ந, ம எனும் மெய்கள் தொடர்ந்து ஈரொற்றுகளாக வரும். இதனைத் தொல்காப்பியம்,

"யரழ என்னும் மூன்று முன்னொற்றக்

கசதப ஙஞநம ஈரொற்றாகும்" (எழுத்.48)

என்றுரைக்கிறது.

| யகரத்தை அடுத்து | | ரகரத்தை அடுத்து | | ழகரத்தை அடுத்து | |
|---|---|---|---|---|---|
| க | வேய்க்குறை | க | வேர்க்குறை | க | வீழ்க்குறை |
| ச | வேய்ச்சிறை | ச | வேர்ச்சிறை | ச | வீழ்ச்சிறை |
| த | வேய்த்தலை | த | வேர்த்தலை | த | வீழ்த்தலை |
| ப | வேய்ப்புறம் | ப | வேர்ப்புறம் | ப | வீழ்ப்புறம் |
| ங | வேய்ங்குறை | ங | வேர்ங்குறை | ங | வீழ்ங்குறை |
| ஞ | வேய்ஞ்சிறை | ஞ | வேர்ஞ்சிறை | ஞ | வீழ்ஞ்சிறை |
| ந | வேய்ந்தலை | ந | வேர்ந்தலை | ந | வீழ்ந்தலை |
| ம | வேய்ம்புறம் | ம | வேர்ம்புறம் | ம | வீழ்ம்புறம் |

மேற்சுட்டியவற்றால் ஈரொற்றுகளாகின்ற பொழுது, ய ர ழ என்ற இடையின ஒற்றுக்களை அடுத்து க ச த ப என்ற வல்லினமும் ங ஞ ந ம என்ற மெல்லினமும் இணைந்து ஈரொற்றுகளாகின்றன என்பது புலப்படுகின்றன. இந்நிலையில் மேற்சுட்டிய மெய்ம்மயக்கத்துள் இடம்பெறும் மெய்கள் தனிமெய்களாகவும் உயிருன் கூடிய மெய்களாகவும் இருக்கலாம் என்பதும் உயிருடன் கூடிய மெய்யாக இருந்த போதும் அவை புணர்ச்சியில் நோக்கப்படும் இயல்பு போல மெய் உயிராக நோக்கப்படும் என்பதும் விளங்குகிறது.

**னகார மகாரம் ஈரொற்றாதல்**

செய்யுள் இறுதிப் போலியில் னகாரமும் மகாரமும் ஈரொற்றாவதைத் தொல்காப்பியம்,

"செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்

னகார மகாரம் ஈரொற்றா றாகும்" (எழுத்.51)

என்றுரைக்கிறது. இந்நூற்பாவிற்கு போன்ம் என்ற சொல்லைச் சான்றுகாட்டுகிறார் இளம்பூரணர்.

**ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகாமை**

ஈரொாற்றுகளாக வரும் குற்றியலுகரம் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியம், ஈரொற்றுத்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
www.ngmtamil.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

தொடராய் வரும் குற்றியலுகரம் இடையொற்றுத் தொடராய் வருதல் இல்லை என்பதைக் குறிப்பிடுகிறது. "ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொட ராகா" (தொல்.எழுத்.408) என்றுரைக்கிறது. இந்நூற்பாவிற்குச் உரையெழுதும் இளம்பூரணர், "ஈர் ஒற்றுத் தொடர்மொழிகளில் இடைத்தொடர் ஆகா. வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் ஆம் எ-டு. ஈர்க்கு மொய்ம்பு என வரும்" என்றுரைக்கிறார்.

மெய்ம்மயக்கத்துள் ய ர ழ என்ற இடையொற்றுகளை அடுத்து க ச த ப என்ற வல்லெழுத்தும் ங ஞ ந ம என்ற மெல்லெழுத்துகளே ஈரொற்றுகளாகும் எனக்கூறப்பட்டிருப்பதின் வழியாகவும் ஈரொற்றுகளாகும் மெய்களில் ய ர ழ என்பனவற்றை அடுத்து பிற இனங்கள் வருமெ அன்றி இடையினம் வருதல் இல்லை என்பதும் புலப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் ஈரொற்றுகளாகும் குற்றியலுகரத்துள்ளும் ஈரொற்று வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் வருமே அன்றி, ஈராற்று இடைத்தொடர் வருதல் இல்லை என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**எழுத்து மயக்கம் ஒன்பதாகுமா?**

இளம்பூரணர் எழுத்துகளை உயிர், மெய், உயிர்மெய் என்றவாறு மூவகையாகக் கொள்கிறார். அதனடிப்படையில் ஓரெழுத்துடன் மற்றொரு எழுத்து தொடர்ந்து வரும் மயக்கம் ஒன்பதாக அமையுமா என்ற வினாவை எழுப்புகிறார்.

> *"உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூன்றனையும் உறழ்ச்சி வகையான் உறழ ஒன்பது உளவாமன்றே. அவற்றுள் தனிமெய்யொடு தனி மெய்ம்மயக்கம் ஒன்றே கூறிய தென்னெனின், மற்றவற்றிற்கு வரையறையின்மையின் வரையறையுடைய தனிமெய்ம் மயக்கமே கூறியொழிந்தார் என உணர்க"(எழுத்.22)*

இளம்பூரணம் குறிப்பிடுகிறார். இளம்பூரணர் குறிப்பிடும் ஒன்பது வகையான மயக்கமாவன,

| | | |
|---|---|---|
| 1. **உயிருடன் உயிர்** | 4. **மெய்யுடன் உயிர்** | **7. உயிர்மெய்யுடன் உயிர்** |
| **2.** உயிருடன் மெய் | **5.** மெய்யுடன் மெய் | 8. **உயிர்மெய்யுடன் மெய்** |
| **3. உயிருடன் உயிர்மெய்** | **6. மெய்யுடன் உயிர்மெய்** | 9. **உயிர்மெய்யுடன் உயிர்மெய்** |

எனும் ஒன்பதாகும். இவற்றுள் மெய்யுடன் மெய் மயங்கும் மயக்கம் மட்டும் கூறப்பட்டு பிற எழுத்துகள் மயங்குவதற்கான மயக்கம வரையின்மையால் கூறாமல் விடப்பட்டன என்பது இளம்பூணர் விளக்கமாகும்.

**தொல்காப்பியம் குறிப்பிடும் எழுத்துகளும் மயக்கமும்**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

தொல்காப்பியம் 33 எழுத்துகளைக் குறிப்பிடுகிறது. அவ்வெழுத்துகள் அகர முதல் னகரம் இறுதியாகிய முப்பதும் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றும் ஆகும்.

**உயிர்மெய் வரிவடிவம்**

மெய் உயிருடன் கூடி ஒலிப்பதையும் அதற்கான வரிவடிவங்களையும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே" (எழுத்.18)

"புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்த லாறே"(எழுத்.17).

இவற்றால், மெய் உயிருடன் கூடி ஒலிப்பதற்கான வரிவடிவங்கள் தொல்காப்பியத்தால் கூறப்பட்டுள்ளன என்பதும் எனினும் எழுத்துகளின் எண்ணிக்கையுள் உயிர்மெய் என்னும் எழுத்து தொல்காப்பியத்துள் கூறப்படவில்லை என்பதும் விளங்கும்.

தொல்காப்பியம் புணர்ச்சிக்கான கருவி செய்யுமிடத்து, எழுத்துகளை உயிர், மெய் என்ற இரண்டாக மட்டுமே குறிப்பிடுகிறது. இதனை,

"உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்
உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியுமென்று
இவ்வென அறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று
ஆயீரியல புணர்நிலைச் சுட்டே" (எழுத்.108).

என்னும் நூற்பாக்களால் அறியலாம். அதாவது, உயிர்மெய் என்ற வரிவடிவம் ஈறாகின்ற பொழுது அது உயிர் ஈறாகவும் முதலாகின்ற பொழுது அது மெய் முதலாகவும் அமையும். இங்கு உயிர்மெய் என்ற வரிவடிவம் உயிராகவும் மெய்யாகவும் கொள்ளப்படுகிதேயன்றி, உயிர்மெய்யாகக் கொள்ளப்படவில்லை என்பது விளங்கும்.

மெய்யீறு புள்ளியுடன் அமையும் என்பதைத் தொல்காப்பியம், "மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்" (எழுத்.105) என்றுரைக்கிறது. இதனால் உயிர்மெய் ஈறு, உயிர் ஈறாகும் என்பதும் உயிர்மெய் முதல் மெய் முதலாகும் என்பதும் விளங்கும்.



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
**www.ngmtamil.in**
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

தொல்காப்பியம், "உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே" (எழுத்.107) என்றுரைக்கிறது. இதனால் உயிர்மெய் என்பது புணர்ச்சிநிலையில் மெய் உயிர் என்றே கொள்ளப்படுகின்றன என்பது பெறப்படும்.

இவற்றால், இளம்பூரணர் குறிப்பிடும் ஒன்பது வகை மயக்கம் என்பதில்

உயிருடன் உயிர்மெய்,

மெய்யுடன் உயிர்மெய்,

உயிர்மெய்யுடன் உயிர்,

உயிர்மெய்யுடன் மெய்,

உயிர்மெய்யுடன் உயிர்மெய்

என்பன உயிரும் மெய்யுமாகவே அமையும் என்பது விளங்கும். அதாவது,

உயிருடன் உயிர்மெய்: உயிர் + மெய் (ஆ வந்தது )

மெய்யுடன் உயிர்மெய்: மெய் + மெய் (வந்தவன் முருகன்)

உயிர்மெய்யுடன் உயிர்: உயிர் + உயிர் (வந்தது ஆ)

உயிர்மெய்யுடன் மெய்: உயிர் + மெய் (மெய் தனித்து மொழி முதலில் வராது)

உயிர்மெய்யுடன் உயிர்மெய்: உயிர் + மெய் (வந்தது கழுதை)

என உயிரும் மெய்யுமாக அமைவதைக் காணலாம்.

இளம்பூரணம், ட் என்ற மெய்யைத் தொடர்ந்து க், ச், ப் என்ற மெய்கள் தொடரும் (எழுத்.23) என்பதற்கு கட்க, கட்சிறார், கட்ப என்பனவாற்றைக் குறிப்பிடுகிறது. இங்கு டகர மெய்யைத் தொடர்ந்து க, ச, ப எனும் உயிர்மெய் வரிவடிவங்கள் இடம்பெறும் சொற்கள் தரப்பட்டாலும் அவை, க், ச், ப் என்ற மெய்யாகக்கொள்ளப்பட்டு, மெய்யுடன் மெய்மயங்குவதாகக் குறிக்கப்படுகிறது (எனினும் இவை ஈராற்று எனக் கொள்ளப்படுவதில்லை).

**உயிருடன் உயிர்**

உயிருடன் உயிர் மயங்குகின்ற பொழுது உடன்படுமெய் பெறுகின்றது. மணி அடித்தான் எனும் சொற்கள் இணைகின்ற பொழுது உடன்படுமெய் பெற்று, மணியடித்தான் என்றாகிறது. இதனால் இளம்பூரணர் குறிப்பிடும் ஒன்பது வகை மயக்கத்துள் உயிருடன் உயிர், உயிர்மெய்யுடன் உயிர், என்பன உடன்படுமெய் பெற்றநிலையில் உயிர் மெய் என்ற இரண்டாக அமையும் விளங்கும்.

உடன்படுமெய் பெறாதநிலையில் உயிருடன் உயிர் இணைந்து வரலாம். இதனை, நீட்டம் வேண்டின் அவ்வள புடைய / கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்" (எழுத்.6) என்பதனால்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
www.ngmtamil.in *DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

உணர்த்துகிறார். அதாவது இரண்டளபுடைய நெடிலையும் ஓர் அளபுடைய குறிலையும் கூட்டி யெழூஉதல் என்பதால் பெறப்படுகிறது.

**மெய்யுடன் உயிர்**

மெய்யுடன் உயிர் என்பதில் உயிரெழுத்து தன் முன்நின்ற மெய்யுடன் கூடி, உயிர்மெய் வரிவடிவமாக எழுதப்பட்டு, புணர்ச்சியில் உயிராகவும் மெய்யாகவும் கொள்ளப்படுகிறது. இந்நிலையில் எல்லா மெய்யுடனும் எல்லா உயிரும் இணைந்து உயிர் மெய்யாக எழுதப்படும் என்பதைத் தொல்காப்பியம்,

"புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே" (எழுத்.17)

என்று சுட்டுகிறது. இதனால் அனைத்து மெய்களைத் தொடர்ந்தும் அனைத்து உயிர்களும் வரும் என்பது பெறப்படுகிறது.

**உயிரும் உயிர் மெய்யும்**

ரகார ழகாரங் குற்றொற் றாகா (எழுத்.49) என்றவிடத்து, குறிற்கீழ் ஒற்றாகா என்ற நிலையில் அவை நெடிற்கீழ் ஒற்றாக வரும் என்பது பெறப்படுகிறது. அதாவது தார், தாழ் என நெடிற் கீழ் ஒற்றாக வரும். கரு, மழு எனக் குறிற்கீழ் ஒற்றாக வருகின்ற பொழுது அவை உயிருடன் கூடிய மெய்யாக வருகிறது. இளம்பூரணர், இந்நூற்பா உரையில் "மேல் வரையறை இல எனப்பட்ட உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு ஒரு வரையறை கண்டு கூறினவாறு" என்பர். உயிர்மெய் என்பது உயிராகவும் மெய்யாகவும் கொள்ளப்படுமே அன்றி, உயிர்மெய்யாகக் கொள்ப்படாது என்பது முன்னர் விளக்கப்பட்டது.

இவற்றால், இளம்பூரணர் குறிப்பிடும் ஒன்பது மயக்கங்களுள், மெய்யுடன் உயிர், உயிருடன் மெய் என்பன வரையறை இன்றி, எல்லா எழுத்தைத் தொடர்ந்தும் எல்லா எழுத்தும் வரும் என்ற நிலையில் வரையறுத்துக்கூறும் தன்னையின இல்லை என்பது விளங்கும். இவ்வாறே, உயிருடன் உயிர் மெய் என்பது உயிருடன் மெய் என்றும், உயிர்மெய்யுடன் மெய், உயிர்மெய்யுடன் உயிர்மெய் என்பதும் உயிரும் மெய்யுமாக வரையின்றி அமைவதும் விளங்கும்.

உயிருடன் உயிர், உயிர்மெய்யுடன் உயிர் என்பன உடன்படு மெய் பெற்று மெய்யுடன் உயிர் என்றவாறு வரையறையின்றி அமைவது விளங்கும். இந்நிலையில், மெய்யுடன் மெய் என்பதும், மெய்யுடன் உயிர் மெய் என்பதும் ஒரு மெய்யுடன் மெய் தொடர்வதற்கான



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
**www.ngmtamil.in**
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

வரையறைக்குரியன என்பதால், மெய்யுடன் மெய் மயங்கும் மயக்கம் கூறப்பட்டுள்ளது விளங்கும்.

**தலையாய அறிவினார்**

மெய்கள் தம்முடன் பிறவும் தம்முடன் தாமுமாய் மயங்கி வரும் என்பது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொருந்தும். இந்நிலையில் புணர்ச்சி இலக்கணத்துள் கூறப்படும் மெய்த் திரிபுகள், ஒற்றுமிகுதல் முதலிய மாற்றங்கள் இம்மெய்ம்மயக்கத்தின் அடிப்படையில் தலையாய அறிவினை உடையரால் உணரப்படும் என்பதை இளம்பூரணர், "மெய்ம்மயக்கம் ஒருமொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவாகலின் மேற்கூறும் புணர்மொழிச் செய்கையெல்லாம் தலையாய அறிவினோரை நோக்க ஒருவாற்றாற் கூறியவாறாயிற்று" (நூன்.23 உரை) என்றுரைக்கிறார். இதனால் ஒரு மொழியிலும் புணர்மொழியிலும் மெய்ம்மயக்கம் வரையறுக்கப்பட்டுள்ளது விளங்கும்.

**மெய்ம்மயக்கமும் தொல்காப்பிய எடுத்துரைப்பும்**

மெய்ம்மயக்கத்தை வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில், தொல்காப்பிய எடுத்துரைப்பு அமைவதைக் காணமுடிகிறது.

**பொன் எனும் சொல் செய்யுளில் வருமிடத்து அதன் ஈற்று னகர ஒற்றுக்கெட, லகரமும் மகரமும் தோன்றி முடியும் என்பதைத் தொல்காப்பியம்,**

**"பொன்னென் கிளவி யீறுகெட முறையின்**
**முன்னர்த் தோன்றும் லகார மகாரம்**
**செய்யுள் மருங்கின் தொடரிய லான" (தொல்.எழுத்.357)**

என்றுரைக்கிறது. இதற்கு இளம்பூரணம், "பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி" (மலைபடு.574) என்பதை எடுத்துக்காட்டுகிறது. பொன் + படை = என்பதில் னகர ஈறு கெட்டு, லகரமாகிய உயிர்மெய்யும், மகர ஒற்றும் பெற்று பொலம்படை என்றானது. இப்புணர்ச்சி மாற்றத்தைத் தொல்காப்பியம் "லகார மகாரம்" என்று குறிப்பிட அதனை விளக்கும் இளம்பூரணம், "முறையின் என்றதனான், லகரம் உயிர்மெய்யாகவும் மகரம் தனிமெய்யாகவும் கொள்க" என்றுரைக்கிறது. இளம்பூரணர் கூறுவது போல் லகரம் உயிருடன் கூடிய மெய்யாகவும் மகரம் தனிமெய்யாகவும் வரும் என்பதைத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. பொதுவாக லகார மாகரம் என்றே உரைத்தள்ளது. இந்நிலையில் லகரமும் மகரமும் இணைந்து ஈரொற்றாக வராது என்பது மெய்ம்மயக்கத்துள் பெறப்படுகிறது. எனவே, லகார மகாரம் எனக் கூறியவிடத்து அது லகர மெய்யும் மகர மெய்யும் எனப் பொருள் கொள்ளப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதும் பெறப்படும். இதனால், மெய்ம்மயக்கக் கருத்துகளை மனதில் கொண்டு இவ்வறான


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

எடுத்துரைப்புகளைத் தொல்காப்பியம் மேற்கொள்கிறது என்பதையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

### முடிவுரை (Conclusion)

தொல்காப்பியத்தில் மெய்ம்மயக்கம் என்பது தனிமொழிகளுக்கும் தொடர்மொழிகளுக்கும் (புணர்ச்சி) பொதுவான ஒரு இலக்கணக் கூறாக அமைகிறது. இக்கட்டுரையின் முடிவுகளாவன:

- **மெய்ம்மயக்கத்தின் வியாபகம்:** மெய்ம்மயக்கம் என்பது நூன்மரபில் மட்டுமல்லாமல், மொழிமரபு மற்றும் புணரியல் கோட்பாடுகளிலும் ஊடாடி நிற்கிறது.
- **விதிமுறைத் தெளிவு:** 'பொன்' என்ற சொல் 'பொலம்படை' எனத் திரியும் இடத்தில், தொல்காப்பியர் "லகார மகாரம்" என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும், மெய்ம்மயக்க விதிகளின்படி லகரமும் மகரமும் இணைந்து ஈரொற்றாக வராது என்பதால், அங்கு 'ல' என்பது உயிர்மெய்யாகவும், 'ம்' என்பது ஒற்றாகவும் கொள்ளப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.
- **இளம்பூரணர் உரை:** இளம்பூரணர் குறிப்பிடும் ஒன்பது வகை மயக்கங்களில், மெய்யுடன் மெய் மயங்குவது மட்டுமே வரையறைக்கு உட்பட்டது என்பதையும், பிற மயக்கங்கள் (உயிர்-உயிர் போன்றவை) வரையறையற்றவை என்பதையும் இக்கட்டுரை நிறுவுகிறது.
- **கட்டமைப்பு:** மெய்ம்மயக்க விதிகளை ஆழ்ந்து நோக்குவதன் மூலமே, தொல்காப்பியர் கூறும் புணர்ச்சி மாற்றங்களையும், எழுத்து வடிவங்களையும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

நூற்பட்டியல்

1. இளவழகன், கோ., பதிப்பாசிரியர். *தொல்காப்பியம்: எழுத்ததிகாரம் - இளம்பூரணம்.* சென்னை: தமிழ்மண் பதிப்பகம், 2003.
2. இளவழகன், கோ., பதிப்பாசிரியர். *தொல்காப்பியம்: எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம்.* சென்னை: தமிழ்மண் பதிப்பகம், 2003.
3. கண்ணன், த. "தொல்காப்பியத்தில் மெய்ம்மயக்கக் கருத்தியல்." *வெளியிடப்படாத கையெழுத்துப் பிரதி.*

References:


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.27*

1. Ilavazhagan, K., editor. *Tolkappiyam: Eluttatikaram - Ilampuranam*. Tamilmann Pathippagam, 2003.
2. Ilavazhagan, K., editor. *Tolkappiyam: Eluttatikaram - Naccinarkkiniyam*. Tamilmann Pathippagam, 2003.
3. Kannan, T. "Tholkappiyathil Meimmayakka Karuthiyal" [Concepts of Consonant Clusters in Tolkappiyam]. *Unpublished Manuscript*, n.d.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*